**லங்காபுர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு லங்காபுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த 09 உள்ளூராட்சி செயற்திட்டங்களுக்காக உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து சபைக்குக் கிடைக்க வேண்டிய மற்றும் சபையினால் செலுத்த வேண்டிய ரூபா 2,872,999 தொகை நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) பிலிசரு செயற்திட்டத்தின் மூலம் அமுல் நடத்தப்படும் சிறிய அளவிலான திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,398,046 தொகை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) தம்பாளை மாடு அறுக்கும் மடுவம் அமைந்துள்ள காணிக்கு நுழைபாதை ஒன்று அமைப்பதற்காக உரித்தாக்கப்பட்ட காணித் துண்டுக்காக ரூபா 80,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அக் காணியின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 8,603,775 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 45,937,435 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 37,333,660 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டிகளின் பெறுமதி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 51,044,033 தொகைகயாகக் காணப்பட்டமையால் ரூபா 51,044,033 இனால் இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,989,472 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 1,068,000 தொகையும், 05 வருடங்களை விஞ்சிய ரூபா 692,461 தொகையான மீதியொன்றும் உட்பட்டிருந்ததுடன் அவ்வாறு பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்காக சபை போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களில் இணங்கியிருக்காமல், தலைவருக்கு மற்றும் பிரதேச சபை மந்திரிமாருக்கு எரிபொருள், தொலைபேசி, காகிதாகி படி என மீளாய்வாண்டின் போது ரூபா 265,750 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,960,090 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,382,089 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 நிலுவைக் கடை வாடகை

2003 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை பெறவேண்டிய ரூபா 1,448,226 தொகையில் இறைச்சிக் கடை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) சபையின் கருமங்களில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 58 ஆக இருந்த போதிலும் அவ் அலுவலர்கள் 10 பேருக்கு மாத்திரமே கடமைகள் சாட்டுதல்கள் எழுத்துமூலமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான அரிசி மாவுடன் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு நிலையத்தின் மாதாந்த வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் விவரங்கள் சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஒவ்வொரு நாளும் சேகரமாகும் 4-5 தொன்களில் 3 தொன்கள் மாத்திரமே சபையில் தொழிலாளர்கள் மற்றும் டிரக்டர்கள் பயன்படுத்தப்பட்டு தல்பொத இல் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 05 ஏக்கர் காணில் போடப்படுகின்றது. இந்த குப்பைகள் தொடர்பாக கழிவுப் பொருட்கள் முகாமைத்துச் செயற்பாடு ஒன்றிற்கு 2016 ஏப்ரல் மாதம் வரையும் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. இந்த நிலைமையில் திறந்த நிலையில் காணப்படும் குப்பைகள் காரணமாக சுற்றாடல்சார் மற்றும் சுகாதார சிக்கல்கள் தோன்றியுள்ளன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் செலவுகள் மற்றும் உள்ளவாறான வரவுகள் செலவுகளிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதுடன் செலவு விடயங்கள் 18 சதவீதம் முதல் 100 சதவீதத்திலும் வருமான விடயங்கள் 06 சதவீத முதல் 94 சதவீதத்திலும் முரண்கள் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேறிய பகுதிகளிலுள்ள ஆதனங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 4.2 உள்ளக் கணக்காய்வு

வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 ஆந் திகதிய இலக்கம் 04/2015 கொண்ட சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

நிதிக்கூற்றுக்களில் காணிகள் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 22 காணித் துண்டுகளுக்காக சபையின் பேரில் காணி உறுதிகள் அல்லது உரிமை சான்றிதழ்களைப் பெற்று உரிமையை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்